**SPECIAL TOPIC: FATHER**
**சிறப்பு தலைப்பு: பிதா**

பழைய ஏற்பாடு, தேவனை ஒரு நெருக்கமான குடும்ப உருவகமாக பிதாவாக அறிமுகப்படுத்துகிறது (சிறப்பு தலைப்பு: தேவனின் பிதாத்துவம் பார்க்கவும்):

1. இஸ்ரேல் தேசம் பெரும்பாலும் YHWH இன் "குமாரன்" என்று விவரிக்கப்படுகிறது (ஒ.பா. ஓசியா 11: 1; மல். 3:17)
2. உபாகம காலத்திற்கு முன்பே தேவனைப் பிதா என ஒப்புவமையாக பயன்படுத்தப்படுகிறது (1:31)
3. உபாகமம் 32ல் இஸ்ரேல் "அவருடைய பிள்ளைகள்" என்றும் தேவன் "உங்கள் பிதா" என்றும் அழைக்கப்படுகிறார்
4. இந்த ஒப்புமை சங்கீதம் 103: 13 இல் கூறப்பட்டுள்ளது. மற்றும் சங். 68: 5 (திக்கற்ற பிள்ளைகளுக்குத் தகப்பன்)
5. தீர்க்கதரிசின புத்தகங்களில் இது பொதுவானது (ஒ.பா. ஏசா. 1: 2; 63: 8; இஸ்ரவேல் பிள்ளையாவும், தேவன் பிதாவாகவும், 63:16; 64: 8; எரே. 3: 4,19; 31: 9).

இயேசு அராமைக் பேசினார், ஆகையால் "தந்தை" தோன்றும் பல இடங்கள், அது கிரேக்க *Pater*, மற்றும் அராமைக் *Abba*வைப் பிரதிபலிக்கக்கூடும் (ஒ.பா. மாற்கு 14:36). "அப்பா" அல்லது "தந்தை " என்ற இந்த குடும்பச் சொல், பிதாவுடனான இயேசுவின் நெருக்கமான உறவைப் பிரதிபலிக்கிறது; இதை அவர் தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு பிதாவுடனான நம்முடைய நெருங்கிய உறவை ஊக்குவிப்பதற்காக வெளிப்படுத்துகிறார். "பிதா" என்ற சொல் பழைய ஏற்பாட்டில் YHWH க்குப் பதிலாக குறைவாகவே பயன்படுத்தப்பட்டுள்ளது, ஆனால் இயேசு அதை அடிக்கடி மற்றும் பரவலாக பயன்படுத்துகிறார். விசுவாசிகளின் கிறிஸ்துவின் மூலமான தேவனோடு கூடிய புதிய உறவுக்கு இது ஒரு முக்கிய சான்றாகும் (ஒ.பா. மத்தேயு 6: 9).

Copyright © 2014 Bible Lessons International